# ஹஸரத் இமாம் முஹம்மது பாக்கிர் அலைஹிஸ்ஸலாம்

## அறிமுகம்

அறிவுக் கடல், ஞானக் களஞ்சியம் எனப் போற்றப்படும் இமாம் அபூ ஜஉபர் பாக்கிருல் உலூம் அவர்கள் ஹிஜ்ரி ஐம்பத்தேழாம் வருடம் ரஜப் மாதம் தலைப் பிறையன்று வெள்ளிக் கிழமை மதீனா நகரில் பிறந்தார்கள்.1

முஹம்மது என்பது அவரது இயற் பெயர். இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களின் தந்தை என்பதால் அபூ ஜஃபர் எனவும் அறிவுக் கடலாகத் திகழ்ந்தமையால் பாக்கிருல் உலூம் எனவும் அழைக்கப்பட்டார்.

தாய் வழியிலும் தந்தை வழியிலும் நபிகள் நாயகம் -ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி- அவர்களின் பரம்பரையாகிறார். இமாம் ஹுஸைனின் புதல்வரான இமாம் ஸஜ்ஜாத் என அழைக்கப்படும் இமாம் ஸெய்னுல் ஆபிதீன் தான் அவருக்குத் தந்தை. அவ்வாறே இமாம் ஹஸனின் கண்ணியமிக்க புதல்வியான உம்மு அப்தில்லாஹ் அன்னாரின் தாயாவார்.2

இமாம் பாக்கிரின் சிறப்பையும் மகிமையையும் பற்றி சிறியோர் பெரியோர் வேறுபாடின்றி அனைவரும் அறிந்து வைத்திருந்தனர். ஹாஷிமீக்கள், அலவீக்கள் அல்லது பாத்திமீக்கள் பற்றிப் பேசப்படும் போதெல்லாம் அவர்கள் அனைவரதும் சிறப்புக்களையெல்லாம் ஒருங்கே பெற்ற மகானாக இமாம் பாக்கிர் அலைஹிஸ் ஸலாம் அனைவராலும் நோக்கப்படுகிறார்.

பேச்சில் வாய்மை, முகத்தில் மலர்ச்சி, பண்புகளில் இமயம் இது அவரது சிறப்பம்சங்களில் சில.

## மகத்துவம்

திருநபி ( ஸல்) தமது ஸஹாபியான ஜாபிர் அப்னு அப்தில்லாஹ் அல் அன்ஸாரீயிடம் பின்வருமாறு கூறினார். அலீ இப்னு அபீ தாலிபின் மகன் ஹுஸைனுக்கு மகனான அலீக்கு முஹம்மத் எனும் மகன் பிறப்பார். அது வரை காலமும் நீரும் உயிர் வாழ்வீர், தவ்றாத்தில் அவரது பெயர் அல் பாக்கிர் என வருகின்றது. அவரைச் சந்தித்தால் எனது ஸலாத்தை அவருக்கு எத்தி வைப்பீராக.

நபிகள் பெருமானின் வபாத்துக்குப் பிறகும் ஜாபிர் நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார். ஒரு முறை இமாம் ஸஜ்ஜாத் அவர்களைச் சந்திக்கவென அவரது இல்லம் ஏகியிருந்தார். சிறுவராயிருந்த இமாம் பாக்கிரை ஹஸ்ரத் ஜாபிர் றழியல்லாஹு அன்ஹு கண்ணுற்றார். சிறுவனைப் பார்த்து கொஞ்சம் முன்னே வாருங்கள் என்றார். பின்னர் கொஞ்சம் பின்னே செல்லுங்கள் என்றார். சிறுவனும் அவ்வாறே செய்தார். அவரது அங்க அசைவுகளையும் உடலமைப்பையும் கண்ணுற்ற ஹஸ்ரத் ஜாபிர், கஃபாவின் ரட்சகனின் மீது ஆணையாக, இது நபிகளாரின் அங்க லட்சணங்களாகும் எனக் கூறி வியந்தார்.

பின்னர் இமாம் ஸெய்னுல் ஆபிதீனிடம், இச்சிறுவன் யார்? என வினவினார்.

எனது மகன். எனக்குப் பிறகு இமாமாக வரவுள்ள முஹம்மத் அல் பாக்கிர் இவர் தான் என இமாம் அறிமுகப்படுத்தினார்.

தன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்ற ஜாபிர் ( றழி), சிறுவனாகவிருந்த இமாம் பாக்கிரின் கால்களை முத்தமிட்டுக் கூறினார். அல்லாஹ்வின் தூதரின் மகனே, என் உயிர் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். உங்கள் பாட்டனாராகிய நபிகள் நாதரின் சலாத்தை ஏற்றுக் கொள்வீராக. உங்களுக்கு ஸலாம் எத்தி வைக்குமாறு அன்னார் என்னைப் பணித்தார் என்றார்.

இமாம் பாக்கிரின் கண்கள் பனித்தன. எமது பாட்டனார் இறைதூதர் மீது என்றென்றும் ஸலாம் உண்டாவதாக. எனக்கு அன்னாரது ஸலாமைச் சுமந்து வந்த உங்கள் மீதும் ஸலாம் உண்டாகட்டும் எனக் கூறினார்கள்.3

## அறிவு

ஏனைய பரிசுத்த இமாம்களைப் போன்றே வஹியின் ஊற்றிலிருந்து தமது அறிவு ஞானத்தை வாரிசாகப் பெற்றார். அவர்களுக்கு எந்த மனிதரும் கற்றுக் கொடுத்ததில்லை. எந்த மனிதரிடமும் கற்றதுமில்லை. மேற்கூறிய ஜாபிர் (றழி) அவர்களும் இமாம் பாக்கிடம் சென்று அறிவு ஞானங்களைக் கற்று வந்தார். அவர் ஒரு முறை தம் வியப்பை வெளிப்படுத்தும் வகையில், இமாம் பாக்கிரே, உண்மையில் தங்களுக்கு சிறு வயதிலேயே அறிவு ஞானங்கள் வழங்கப்பட்டதாக நான் சாட்சி கூறுகிறேன் என்று கூறுவார்.4

அப்துல்லாஹ் இப்னு அதா அல் மக்கீ தெரிவிக்கிறார். ஹகம் இப்னு உதய்பா ஒரு தலை சிறந்த அறிஞர். மக்கள் மத்தியில் அறிவின் சிகரம் எனப் போற்றிப் புகழப்பட்டார். இமாம் பாக்கிரின் முன்னால் அவர் பணிந்து மரியாதை செய்வதைப் போல் எந்த அறிஞனும் மரியாதை செலுத்துவதை யாரும்

கண்டதில்லை. இமாம் பாக்கிரின் முன்னால் ஹகம் ஒரு சிறு பிள்ளையைப் போல ஆகிவிடுவார்.5

இமாம் பாக்கிரின் நிகரற்ற ஆளுமையும் அளவற்ற அறிவு ஞானமும் அறிஞர்களையே திக்குமுக்காட வைத்தது. ஜாபிர் இப்னு ஜஅபீ, அன்னவரிடமிருந்து ரிவாயத் செய்யும் போது நபிமார்களின் அறிவை வாரிசாகப் பெற்றவராகிய முஹம்மது இப்னு அலீ இப்னுல் ஹுஸைன். எனக் குறிப்பிடுகிறார்.6

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமரிடம் ஒரு முறை ஒரு மனிதர் ஒரு சந்தேகத்தைக் கேட்டார். இப்னு உமரால் பதில் சொல்ல முடியவில்லை. எனவே, சிறுவராக இருந்த இமாம் பாக்கிரைச் சுட்டிக்காட்டி, அந்தச் சிறுவனிடம் கேளுங்கள். விடையை எனக்கும் சொல்லுங்கள் என்றார். அம் மனிதர் இமாம் பாக்கிரிடம் அக் கேள்வியைத் தொடுத்தார். திருப்திகரமான பதிலும் கிடைத்தது. இப்னு உமரிடம் அதனை அறிவித்த போது அவர் கூறினார்: அவர்கள் நபிகளாரின் குடும்பத்தினர். அறிவு ஞானம் அவர்களுக்கு அல்லாஹ் விடமிருந்தே கிடைக்கிறது.7

அபூ பஸீர் விசித்திரமான இந்த சம்பவத்தை அறிவிக்கிறார். நான் ஒரு முறை இமாம் பாக்கிருடன் மஸ்ஜிதுன்னபிக்குச் சென்றிருந்தேன். மஸ்ஜிதுக்கு மக்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

இமாம் என்னிடம், இங்குள்ள மனிதர்கள் என்னைக் காணுகிறார்களா எனக் கேட்டுப் பாருங்கள் என்றார்.

சந்திக்கின்ற ஒவ்வொருவரிடமும் நான், அபூ ஜஃபரைக் கண்டீர்களா? என விசாரித்தேன். இல்லையென்றே பதில் கிடைத்தது. எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அன்னாரை யாரும் கண்டுகொள்ளவில்லை. இப்போது இமாமின் மிக நம்பிக்கைக்குரிய நேசர்களில் ஒருவரான அபூ ஹாரூன் அங்கு வந்தார். பார்வையில் அவருக்கு சிக்கல் இருந்தது. அவரிடமும் விசாரிக்குமாறு இமாம் கூறினார்.

அபூ ஜஃபரைக் கண்டீர்களா? அபூ ஹாரூனிடம் கேட்டேன்.

உமக்குப் பக்கத்தில் தானே நிற்கிறார்என்றார் பதிலாக.

எப்படித் தெரியும்?நான் கேட்டேன்.

ஒளிமயமாகப் பிரகாசிக்கும் அவரை எப்படி நான் இனம் காணாமல் இருக்க முடியும் என்றார் அபூ ஹாரூன்.8

அபூ பஸீர் இன்னொரு சம்பவம் பற்றிக் கூறுகிறார். ஆபிரிக்காவில் இருந்து ஒருவர் இமாமைக் காண வந்திருந்தார். இமாமுக்கு நெருக்கமான ராசித் என்பவரைப் பற்றி அம்மனிதரிடம் விசாரித்தார். அவர் சுகமாக இருக்கிறார். உங்களுக்கு ஸலாமும் சொன்னார்என்றார் அம் மனிதர்.

இமாம் பதிலுக்கு, அல்லாஹ் அவருக்கு ரஹ்மத் செய்வானாகஎன்றார்.

இதனைக் கேட்டு வியந்த அம்மனிதர் கேட்டார்: என்ன அவர் காலமாகி விட்டாரா?

ஆம்.

எப்போது?

நீங்கள் புறப்பட்டு இரண்டு நாட்களில்.அவர் நோய்வாய்ப்பட்டிருக்கவுமில்லையே.

நோய் வந்தால் மட்டும் தான் மரணிப்பார்களோ?

அபூ பஸீர் காலமான அம்மனிதரைப் பற்றி இமாமிடம் விசாரித்தார். இமாம் சொன்னார்: அவர் எமது நேசர்களில் ஒருவர். எமக்கு அவற்றைத் தெரிந்து கொள்கின்ற தன்மை அறவே கிடையாது எனத் தப்பெண்ணம் கொள்ள வேண்டாம். அல்லாஹ் மீது ஆணையாக. உங்கள் செயல்களில் எதுவும் எமக்கு மறைக்கப்படுவதில்லை. நாம் உங்களுடன் நெருக்கமாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நல்லது செய்யப் பழகிக் கொள்ளுங்கள். அதுவே உங்களுக்கு அடையாளமாக அமையட்டும். எனது பிள்ளைகளுக்கும் நேசர்களுக்கும் இதனையே போதிக்க விரும்புகிறேன்.9

இன்னொருவர் அறிவித்த சம்பவம் இது:.

கூபாவில் ஒரு பெண்ணுக்கு நான் குர்ஆனைக் கற்றுக் கொடுத்தேன். ஒரு நாள் அவருடன் தரக் குறைவாக நடந்து கொண்டேன்.

இச்சம்பவத்துக்குப் பின்னர் இமாம் பாக்கிரைச் சந்திக்க மதீனா சென்றிருந்தேன். என்னைக் கண்டதும் இமாம் அவர்கள்: தனிமையில் கூடப் பாவம் செய்பவர்களை அல்லாஹ் சகித்துக் கொள்ள மாட்டான். அந்தப் பெண்ணிடம் என்ன சொன்னீர்?எனக் கண்டித்தார்.

வெட்கத்தால் நான் தலை குனிந்தேன். பாவமன்னிப்புக் கோரினேன். இனி மேலும் இவ்வாறாக நடந்து கொள்ளக் கூடாதுஎனக் கண்டித்தார்.10

## பண்பு

சிரியா தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு மனிதர் மதீனாவில் வசித்து வந்தார் அவர் இமாம் பாக்கிர் அவர்களது வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவார். இமாமைப் பார்த்து அவர் ஒருமுறை இவ்வாறு கூறினார். 'உலகிலே தங்களை விட எனக்கு மிக வெறுப்புக்குரியவர் வேறு எவருமில்லை. தங்கள் மீதும் தங்களது அஹ்லுல்பைத்தினர் மீது கொண்டுள்ளது போல் வேறு யார் மீதும் எனக்கு விரோதமில்லை அல்லாஹ்வுக்கும் ரசூலுக்கும் அமீருல் முஃமினீன் ஆகிய கலீபாவுக்கும் வழிப்படுவதென்பது உங்கள் பகைமை பாராட்டுவதன் மூலமே முழுமை பெறும் என்று நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆயினும் தாங்களோ பேச்சாளராகவும் மொழி வல்லுநராகவும் இருக்கிறீர்கள் அதனால் தான் நான் உங்களது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்கிறேன்'.

இந்நிலையிலும் இமாம் பாக்கிர் அம்மனிதர் மீது இரக்கம் காட்டியதோடு அன்பும் கனிவும் மிக்க முறையில் நடந்து கொண்டும் வந்தார்கள். சில நாட்கள் சென்றன அந்த சிரிய நாட்டு மனிதர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் விழுந்தார். தனது மரணத்துக்குப் பின் தனக்கான ஜனாஸா தொழுகையை இமாம் பாக்கிர் அவர்களே நடாத்த வேண்டும்மென தனது குடும்பத்தினரிடம் இறுதி உபதேசம் செய்தார்.

ஓர் இரவின் நடுநிசியில் அம்மனிதர் இறந்து விட்டதை அவரது குடும்பத்தினர் அவதானித்தனர் அவர்களில் ஒருவர் இமாம் பாக்கிரைச் சந்திப்பதற்காக அதிகாலையில் பள்ளிவாசலுக்கு வந்தார். இமாம் தொழுகையை முடித்த பின் வழமை போன்று பிரார்த்தனை மற்றும் திக்ர் சொய்வதில் மூழ்கி இருந்தார். வந்த மனிதர் இமாமை நெருங்கி அந்த சிரியா தேசத்து மனிதர் இறந்து விட்டார். அவருக்கான ஜனாஸா தொழுகையை தாங்கள் தான் நிறைவேற்ற வேண்டுமென்பது அவரது இறுதி ஆசையாக இருந்தது எனக் கூறினார்.

அதைக் கேட்ட இமாம் அவர் இன்னும் மரணிக்கவில்லை நீங்கள் அவசரப்பட்டு எதுவும் செய்து விட வேண்டாம் நான் அங்கு வரும் வரை எதிரபார்த்திருங்கள் என்று கூறி அவரை அனுப்பி வைத்தார்.

அதன் பிறகு இமாம் வுழு செய்து இரண்டு ரகஆத் தொழுத பின் தமது கைகளையேந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். சுஜூதுக்கு சென்று அதிலே சூரிய உதயம் வரை தரித்திருந்தார்கள். அதன்பின் குறிப்பிட்ட அந்த சிரிய தேசத்து மனிதருடைய வீட்டுக்கு வந்தார்களை. அவருடைய தலைப்பக்கமாக சென்று அமர்ந்து அவரது பெயரைக் கூறி அழைத்தார்கள். மரணித்தது போல் படுத்திருந்த அம்மனிதர் இமாமின் குரல் கேட்டதும் கண்களைத் திறந்தார்.

இமாம் அம்மனிதரை எழுந்து உட்கார செய்து சுவரில் சாய்ந்து இருக்க வைத்தார்கள். குடிபானம் ஒன்றை வரவழைத்து அதனை அவருக்குப் பருக்கினார்கள். அவரது குடும்பத்தாரைப் பார்த்து 'குளிர்மையான உணவை இவருக்கு வழங்குங்கள்' எனக் கூறினார்கள் பிறகு தமது இருப்பிடத்துக்கு திரும்பி விட்டார்கள்.

நீண்ட நாட்கள் செல்லவில்லை அம்மனிதர் பூரண சுகம் பெற்று எழுந்து விட்டார் பிறகு இமாமைத் தேடி வந்து சொன்னார்: 'நிச்சயமாக தாங்கள் மனிதர்களுக்கான அல்லாஹ்வின் அத்தாட்சி என்று நான் சாட்சி கூறுகின்றேன்'11

அக்கால சூபியாக்களில் ஒருவராக இருந்த முஹம்மத் இப்னு முன்கதிர் கூறுகின்றார்: நான் கடினமான உஷ்ணம் நிறைந்த ஒரு நாளில் மதீனாவிலிருந்து வெளியேறினேன். அப்போது இமாம் பாக்கிர் அவர்கள பயிர்ச்செய்கையைப் பார்வையிட தமது வயல் சேனையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையும் அவர்களுடன் அவர்களது பணியாளர்கள் அல்லது தோழர்கள் இருவர் உடன் அவதானித்தேன். குறைஷிக்குல முக்கியஸ்தர் இது போன்ற ஒரு நேரத்தில் உலகாசையுடன் சென்று கொண்டிருக்கிறார். அவருக்கு நான் உபதேசம் செய்ய வேண்டும்' என்று நான் என் மனதுக்குள் எண்ணிக் கொண்டேன்.

இமாமை நான் நெருங்கினே; அவர்களுக்கு ஸலாம் சொன்னேன். பெரும் சிரமத்துடன் அவர்கள் எனக்கு பதிலளித்தார்கள். அவர்களது தலையிலிருந்தும் முகத்திலிருந்தும் வியர்வை வடிந்து கொண்டிருந்தது. நான் அவர்களை நோக்கி 'அல்லாஹ் உங்கனை ஈடேற்றடாக்கி வைப்பானாக உங்களைப் போன்ற ஒரு மனிதர் இப்படியான நேரத்தில் உலகாசையுடன் நடந்து கொள்ளாலாமா? இதே நிலையில் உங்களது இறுதி முடிவு வந்து விட்டால் உங்களது நிலையென்ன?' என்று வினவினேன்.

அவர்கள் கூறினார்கள் 'அல்லாஹ் மீது ஆணையாக நான் இவ்வாறான நிலையில் இருக்கும் போது எனக்கு மரணம் வருமானால் நிச்சயமாக நான் அல்லாஹ்வுக்கு வழிப்பட்ட நிலையில் மரணமெய்துவேன். ஏனெனில் இந்த வழிமுறையின் மூலமாக நான் உங்களை விடடும் ஏனைய மனிதர்கனை விட்டும் தேவையற்றிருக்க முனைகின்றேன் அதேவேளை நான் பாவகாரியங்களில் மூழ்கியிருக்கும் நிலையில் எனது முடிவு என்னை வந்தடைவததைத்தான் நான் அஞ்சுகின்றேன்'

நான் கூறினேன்: அல்லாஹ் தங்கள் மீது அருள் புரிவானாக நான் உங்களுக்கு உபதேசம் புரிய வேண்டும்மென்று எண்ணி வந்தேன் ஆனால் நீங்கள் எனக்கு உபதேசம் புரிந்து என்னை விழிப்படையச் செய்து விட்டீர்கள்'12

## உமையாக்களுடன்

ஓர் இமாம் அவரை மனிதர்களோடு கூடி வாழ்ந்தாலும் அவர்களில் இருந்து ஒதுங்கி வாழ்ந்தாலும் அவரது இமாமத்தில்; அவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை ஏனெனில் இமாமத் என்பது ஒரு தெய்வீக அந்தஸ்தாகும் எனவே மனிதர்கள் தமது உளவிருப்புப்கேற்றாற் போல் தமக்கான இமாமைத் தெரிந்தெடுத்துக் கொள்ள முடியாது.

கொடுமைக்காரர்களும் உரிமைகளைச் சூறயாடுவோரும் இமாமத்தின் உயரிய அந்தஸ்தை எப்போதும் பொறாமைக் கண்கொண்டு நோக்குபவர்கனாகவே இருந்தனர். ஏதோ ஒரு வகையில் இமாமத்திற்குரிய விசேடத் தன்மைகளில் ஒன்றான கிலாபத்தையும் ஆட்சி நிர்வாகத்தையும் பறித்துக் கொள்வதில் முழு மூச்சோடு ஈடுபட்டனர் இந்த இலக்கை அடைந்து கொள்ளும் விடயத்தில் அவர்கள் குற்றச் செயல்களையும் கூட விட்டுவைக்கவில்லை.

உமையா ஆட்சியாளராக இருந்த ஹிஷாம் இப்னு அப்தில் மாலிக்கின் ஆட்சிக்காலத்தில் இமாம் பாக்கிரின் நிலையும் இத்தகையதாகவே அஹ்லுல்பைத் இமாம்களுக்கிருக்கின்ற உயரந்தஸ்தை வெளிப்படையில் அவர்களிலிருந்து களைவதற்கும் அவர்கள் மீது அநீதியையும் அட்டூழியத்தையும் திணிப்பதற்கும் ஹிஷாம் உள்ளிட்ட உமையாக்கள் அனைவருக்கும் தம்மாலான அனைத்தையும் மனிதர்களுடைய உள்ளங்களில் அந்த இமாம்களால் இருந்து வந்த மதிப்பையும் உயர்கௌரவத்தையும் அவர்களால் களையவே முடியவில்லை.

இமாம்களுடைய ஆன்மீக மகத்துவமானது பகைவர்களுடைய உள்ளங்களிலும் அன்பை ஏற்படுத்துக் கூடியதும், இமாம்களுக்கு மரியாதை செய்வதன் பால் அவர்களை தூண்டக் கூடியதுடான மிக உயர்ந்த எல்லையை அடைந்திருந்தது.

ஒரு வருடம் ஹிஷாம் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு சென்றார். அவ்வருட ஹஜ்ஜாஜிகளில் இமாம் பாக்கிர், இமாம் ஸாதிக் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். இமாம் ஸாதிக் அவர்கள் ஒரு நாள் மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்கள்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அவன் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களை சத்தியத்தைக் கொண்டு அனுப்பி வைத்தான். அதைக் கொண்டே எம்மை சிறப்பாக்கினான். நாங்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாவோம். நாங்கள் பூமியில் அல்லாஹ்வுடைய பிரதிநிதிகளாவோம். எம்மைப் பின்பற்றுபவர் வெற்றி பெறுவார். எம்மைப் புறக்கணித்து, பகைமை பாராட்டுபவர் நஷ்டமடைவார்.

அதற்குப் பின் நடந்தவை பற்றி இமாம் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விபரிக்கின்றார்கள்: நான் பேசியவை ஹிஷாமுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. எனினும் நாம் மதீனாவுக்கும் அவர் டமஸ்கஸுக்கும் திரும்பும் வரை அவர் எமக்கு எவ்வித தீங்கும் இழைக்க வில்லை. பின்னர் மதீனாவிலிருந்த தனது கவர்னரிடம் என்னையும் எனது தந்தையையும் டமஸ்கஸுக்கு அழைத்து வருமாறு பணித்தார்.

நாம் டமஸ்கஸ்ஸை அடைந்தோம். எனினும் மூன்று நாட்களாக அவரை சந்திப்பதற்கு ஹிஷாம் எமக்கு அனுமதி தரவில்லை.நான்காம் நாள் அவரிடம் சென்றோம். அவர் தனக்குறிய சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அவரது படை வீரர்கள் அவருக்கு முன்னால் தமது திறமைகளை வெளிக் காட்டும் முகமாக ஓர் இலக்கை நோக்கி அம்புகளை எய்து காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹிஷாம் என்னுடைய தந்தையின் பெயரைக் கூறி அழைத்து உங்களது கோத்திரப் பெரியவர்களுடன் இணைந்து அம்பெய்வதில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

எனது தந்தை இமாம் பாக்கிர் அவர்கள் கூறினார்கள் நான் வயது முதிர்ந்த பலவீனனாகி விட்டேன் என்னைப் பொறுத்த வரை அம்பெய்த காலமெல்லாம் முடிந்து விட்டது. ஆகவே என்னை மன்னியுங்கள்.

எனினும் ஹிஷாம் தன் மீது சத்தியமிட்டு வற்புறுத்தி உமையாக்களில் இருந்த ஒரு வயோதிபரை அழைத்து, அவரது கையில் இருந்த வில்லை இமாமிடம் கொடுக்கும் படியாகப் பணித்தார்.அவ்வயோதிபரிடமிருந்து வில்லைப் பெற்றுக் கொண்ட எனது தந்தை வில்லிலிருந்த அம்பை எய்தார்கள். அது சற்றும் பிசகாது இலக்கின் மையப் புள்ளியை ஊடறுத்துச் சென்று குத்திட்டு நின்றது. இரண்டாவது அம்பை எய்தார்கள். அது முதலாவது அம்பை இரண்டாகக் கிழித்துஇலக்கின் மையப் புள்ளியைத் தொட்டது. மூனடறாவது அம்பை எய்தார்கள். அது இரண்டாவது அம்பைப் பிளந்து இலக்கின் மையப் புள்ளியைத் தொட்டது. இவ்வாறு ஒன்பது அம்புகளை எய்து முடித்தார்கள். இமாமின் வல்லமை கண்டு அங்கிருந்த எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆராவாரமிட்டனர். சங்கடத்திகுள்ளான ஹிஷாம் சத்தமிட்டு இவ்வாறு கூறினார்: இமாம் பாக்கிரே! சிறப்பகாக செய்தீர்கள். நீங்கள் அரபிகளிலும் அஜமிகளிலும் மிகச் சிறந்த வில்வித்தைக் காரர். இவ்வாறிருக்க நான் அம்பெய்த காலமெல்லாம் முடிந்து விட்டது என்று எப்படிக் கூறுவீர்கள்! வெளிப்படையில் ஹிஷாம் இவ்வாறு கூறிய போதும் அதே நேரத்திலேயே எனது தந்தையைக் கொலை செய்வதற்கான தீர்மானத்தையும் அவர் எடுத்திருந்தார். அது பற்றியே அவர் சிந்தித்துக் கொண்டிருந்ததால் எம்மை அமரும்படியும் அவர் பணிக்கவில்லை. அவருக்கு முன்னால் நாங்கள் நின்று கொண்டிந்தோம். நேரம் நீண்டது

கலிபாவின் இவ் அலட்சியம் எனது தந்தைக்கு சீற்றத்தை ஏற்படுத்திற்று. அவர்களுக்கு கோபம் ஏற்பட்டால் வானத்தின் பால் பார்வையை செலுத்துவார்கள். அவர்களது முகத்தில் கோபத்தின் அடையாளம் தெளிவாகத் தெரியும். எனது தந்தையின் கோபத்தை விளங்கிக் கொண்ட ஹிஷாம் உடனே தம்முடன் வந்து அமர்ந்து கொள்ளுமாறு எம்மைப் பணித்தார்.தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து வந்து எனது தந்தைக்கு வலது புறத்திலும் என்னை எனது தந்தையின் இடது புறத்திலுமாக உட்காரச் செய்தார். பிறகு எனது தந்தையுடன் பேச ஆரம்பித்தார்.

நிச்சயமாக குறைஷியர், அரபிகள் அஜமிகள் அனைவரையும் விட உங்களின் மூலமாக உள்ள தமது சிறப்பையிட்டு பெருமிதம் கொள்ள முடியும்.உங்களது கைகளுக்கு அவர்கள் அடிபணிகின்றார்கள். இந்த வில்வித்தைத் திறமையை யாரிடம் இருந்து நீங்கள் கற்றுக் கொண்டீர்கள்? இதனைக் கற்றுக் கொள்வதற்கென எவ்வளவு நேரத்தை செவிட்டீர்கள்?

எனது தந்தை கூறினார்கள்: மதீனா வாசிகள் அனைவரும் வில்வித்தையில் சிறந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! நான் இளவயதில் இதனைக் கற்றுக் கொண்டேன். இப்போது நீங்கள் கூறும் வரை நான் அதனைத் தவிர்த்தே வந்துள்ளேன்.

ஹிஷாம் கூறினார்: விவரம் புரிந்த நாளிலிருந்து இன்று வரை இவ்வாராக துல்லியமாகவும்,கச்சிதமாகவும் அம்பெய்த எவரையும் நான் கண்டதில்லை. உங்களை விட சிறப்பாக அம்பெய்யக் கூடிய எவரும் இருக்கமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன். நீங்கள் எய்தது போலவே உங்களது புதல்வர் ஜஃபரும் அம்பெய்யக் கற்றுக் கொண்டுள்ளாரா?

எனது தந்தை கூறினார்: நிச்சயமாக நாங்கள் பரிபூரணம், முழுமை என்பவற்றை அல்லாஹ் எவ்வாறு தமது நபியின் மீது இறக்கி வைத்தானோ அவ்வாறே அனந்தரச் சொத்தாகப் பெற்று கொண்டு வருகின்றோம்.அல்லாஹ் கூறுகின்றான்: இன்றைய தினம் உங்களுக்காக உங்களது மார்க்கத்தை பரிபூரணபடுத்தி விட்டேன்.எனது அருட்கொடைகளை முழுமையாக்கி விட்டேன். உங்களுக்கான மார்க்கமாக இஸ்லாத்தை திருப்தி கொண்டேன்.13

பூமியானது இத்தகைய செயற்பாடுகளை பரிபூரணத்துவ அமைப்பில் மேற்கொள்ளச் சக்தி பெற்றவர்களை விட்டும் தனிமைப்பட்டிருக்க மாட்டாது.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஹிஷாமின் கண்களிரண்டும் விரிந்தன. கோபத்தினால் அவரது முகம் சிவந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்த அவர் பின் தலையை உயர்த்தி, நாங்களும் நீங்களும் அப்துமனாபுடைய

பரம்பரையில்லையா? பரம்பரையைப் பொறுத்தவரை நாங்கள் உங்களுக்கு சமமானவர்களே! ஏன்று கூறினார்.

எனது தந்தை இமாம் பாக்கிர் அவர்கள் கூறினார்கள்: ஆம் எனினும் அல்லாஹ் பிறருக்கு வழங்காத பல விசேட அம்சங்களின் மூலம் எம்மை சிறப்புப் படுத்தியுள்ளான்.

ஹிஷாம் வினவினார்: அல்லாஹ் அப்துமனாபுடைய பரம்பரையிலிருந்து தனது நபியை வெள்ளை, கறுப்பு, சிவப்பு நிறமான அனைத்து மனிதர்களுக்குமென பொதுவாக அனுப்ப வில்லையா? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களுக்குப் பின் வேறு நபியில்லை. அவ்வாறிருக்க அந்த அறிவை நீங்கள் எங்கிருந்து அனந்தரம் பெறுவீகள்? நீங்கள் நபிமார்களும் அல்லவே?

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பதிலளித்தார்கள்: அல்லாஹ் நபியவர்களை விளித்து தனது அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான்,நபியே! நீர் அவசரப்பட்டு அல்குர்ஆனை ஓத உம்முடைய நாவை அசைக்காதீர். ஏனெனில் அதனை ஒன்று சேர்த்து நீர் ஓதும்படி செய்வது நிச்சயமாக நம்மீதுள்ள கடமையாகும். ஆகவே அதனை நாம் உமக்கு ஓதிக் காண்பித்தால் அவ்வாறே நீர் அதனை பின் தொடர்ந்து ஓதும்.14

அவர்களது நாவு அல்லாஹ்வைத் தொடர்ந்து ஓதியது என அல்குர்ஆன் வசனம் விபரிக்கின்ற மகத்துவமிக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் பிறருக்கு வழங்கப்படாத பல சிறப்பம்சங்களைக் கொண்டு எம்மை தனித்துவப் படுத்தியுள்ளார்கள். பிறருக்கு சொல்லாத பல இரகசியங்களை அவர்கள் ஹஸரத் அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வெளிப்படுத்திக் கூறியுள்ளார்கள். அல்குர்ஆன் கூறுகின்றது, அதனை காதால் கேட்பவர் பாதுகாத்து ஞாபகத்தில்வைத்துக் கொள்வார்15 (சூரா அல்ஹாக்கா) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் ஹஸரத் அலீயைப் பார்த்துக் கூறினார்கள்: நிச்சயமாக உமது காதுகள் அத்தகையதாக இருக்க வேண்டுமென நான் அல்லாஹ்விடம் வேண்டியுள்ளேன்.

ஹஸரத் அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூபாவில் ஒருமுறை கூறினார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் எனக்கு அறிவின் ஆயிரம் வாசல்களைத் திறந்து வைத்தார்கள். ஒவ்வொரு வாசலிலிருந்தும் வேறு ஆயிரம் வாசல்கள் திறக்கின்றன.

அல்லாஹ் குறிப்பிட்ட பரிபூரணத்துவத்தைக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களைத் தெரிவு செய்தது போலவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் ஹஸரத் அலீயைத்

தேர்ந்தெடுத்து, பிறருக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அந்த சுனைக்கும் ஊற்றிலிருந்து நாங்கள் அறிவைப் பெற்றுக் கொள்கின்றோம். அந்த பரிபூரண அறிவை அனந்தரமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் நாங்கள் மாத்திரமே. இவ்வாறு இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி முடித்தார்கள்.

ஹிஸாம் வினவினார்: நிச்சயமாக அலி தமக்கு மறைவான விடயங்களைப் பற்றி அறிவு இருப்பதாக வாதிட்டார். ஆனால் அல்லாஹ் மறைவான விடயங்களை எவருக்கும் வெளிப்படுத்துவதில்லையே?

இமாம் பாக்கிர் அவர்கள் அதற்கு பதிலளித்தார்கள்: அல்லாஹ் தமது நபியின் மீது புனித அல்குர்ஆனை இறக்கினான். அதில் மறுமை வரையுமான கடந்தகால எதிர்கால நிகழ்வுகளுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்தினான். அத்திருமறையில் அல்லாஹ் கூறுகிறான்: "(நபியே!) ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விபரிக்கக்கூடிய இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம்"16 பிறிதொரு வசனத்தில், " ஒவ்வொன்றையும் தெளிவான ஏட்டில் நாம் பதிவு செய்து வைத்திருக்கின்றோம்"17 பிறிதொரு வசனத்தில் "எவற்றையும் வேதத்தில் குறிப்பிடாது நாம் விட்டு வைக்கவில்லை"18 என அல்லாஹ் கூறுகிறான்.

அல்லாஹ் ஹஸரத் அலீ அவர்களுக்கு அல்குர்ஆனின் இரகசியங்கள் அனைத்ததையும் கற்றுக் கொடுக்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களைப் பணித்தான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: "அலீ உங்களில் சிறந்த தீர்ப்பாளர்"

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இவ்விளக்கத்தைக் கேட்டதும் ஹிஸாம் மௌனமானார். இமாமவர்கள் அங்கிருந்து வெளியாகிச் சென்றார்கள்.19

## முரண்பாட்டாளர்களுக்கு ஆதாரம் காண்பித்தமை

அப்துல்லாஹ் இப்னு நாபிஃ என்பவர், அமீருல் முஃமினீன் ஹஸரத் அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்களை விரோதம் பாராட்டியவர்களில் ஒருவராக இருந்தார். அவர் சொல்வார்: "அலீ, நஹ்ரவான் யுத்தத்தில் காரிஜீன்களை கொலை செய்ததை நியாயப்படுத்தக் கூடியவர் உலகில் இருக்கின்றார் என்றால், அவர் கிழக்கிலோ மேற்கிலோ உலகின் எப்பகுதியிலிருந்தாலும் அவரை நான் சந்தித்து விவாதம் பண்ண வேண்டுமென விரும்புகிறேன்"

அப்போது சிலர் அவரிடம் "ஹஸரத் அலீயின் புதல்வர்கள் அதனை நியாயப் படுத்துவதற்கு சக்தி பெறமாட்டார்கள் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டனர்.

அதற்கவர் அவருயைட பிள்ளைகளில் அறிஞர்கள் இருக்கின்றார்களா? என்று வினவினார். "இக்கேள்வியே உனது அறியாமைக்கு ஆதாரமாகும். ஹஸரத் அலீயுடைய புதல்வர்கள் அறிஞராக அல்லாமல் இருக்க முடியுமா?" என்று அவர்கள் எதிர்வினாத் தொடுத்தனர்."அப்படியானால் அவருடைய புதல்வர்களில் உள்ள இன்றைய கால அறிஞர் யார்? என அவர் கேட்டார். "இமாம் பாக்கிர்" என அவர்கள் அவருக்கு சொல்லிக் கொடுத்தனர்.

அப்துல்லாஹ், இமாம் பாக்கிரை சந்திப்பதற்காக தனது தோழர்களுடன் மதீனாவுக்குப் புறப்பட்டார். அங்கு சென்று இமாம் பாக்கிரை சந்திப்பதற்காக அனுமதி வேண்டினார்.

இமாம் பாக்கிர் அவர்கள், அப்துல்லாஹ்வை குறித்த ஓரிடத்தில் பயணப் பொருட்களுடன் இறங்கி தங்கியிருக்குமாறும் நாளை தம்மிடத்திற்கு வந்து தம்மை வந்து தம்மை சந்திக்குமாறும் தமது பணியால் மூலம் செய்தியனுப்பினார்கள்.

மறுநாள் காலை அப்துல்லாஹ்வும் அவரது தோழர்களும் இமாம் பாக்கிர் அவர்களின் அமர்வுக்கு வந்தனர். இமாமவர்கள் முஹாஜிரீன்கள், அன்ஸாரிகளின் பிள்ளைகள், குடும்பத்தினரை தமது அமர்வுக்கு ஒன்று சேர்த்திருந்தார்கள். கூட்டம் அதிகமாகியதும் இமாதவர்கள் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் வெண்மை கலந்த சிவப்பு நிறமான ஆடை அணிந்திருந்ததனால் பௌர்னமி இரவின் முழுநிலவு போல் பிரகாசமாகத் தெரிந்தார்கள். அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்:

"அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அவனே காலத்தையும் இடத்தையும் சிருஷ்டிகளையும் படைத்தான். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனுக்கு வயது இல்லை. தூக்கம் இல்லை. வானங்கள் பூமியினுடைய ஆட்சி அவனுக்குரியது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துகுரிய இறைவன் வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் அவனது தேர்வு செய்யப்பட்ட அடியாரும் அவனது நெருக்கமான தூதருமாவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். நுபுவ்வத்தின் மூலமாக எங்களை மேன்மைப் படுத்தி விலாயத்தின் மூலமாக எம்மைச் சிறப்புப் படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

முஹாஜிரீன்கள், அன்சாரிகளின் பிள்ளைகளே! ஹஸரத் அலீயினுடைய சிறப்புக்களை அறிந்தவர்கள் அதனை இந்த சபையில் குறிப்பிடுங்கள்.

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வாறு கூறியதும், அந்த சபைக்கு சமுகமளித்திருந்த ஒவ்வொருவரும் தாம் அறிந்தவகையில் ஹஸரத்

அலீயினடைய சிறப்புக்களைப் பற்றி எடுத்துக் கூறினர். கைபர் யுத்த நிகழ்வும் அங்கு பிரஸ்தாபிக்கப் பட்டது. அவர்கள் குறிப்பிட்டார்கள்: கைபர் யூதர்களுடனான யுத்தத்தின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் குறிப்பிட்டார்கள்: "நான் யுத்தம் நடைபெறவுள்ள நாளைய தினம் எமது கொடியை ஒரு மனிதருடைய கையில் ஒப்படைப்பேன். அவர் அல்லாஹ்வையும் ரசூலையும் விரும்பக் கூடியவர். அல்லாஹ்வும் ரசூலும் அவரை விரும்புகின்றனர். கோழைத்தனமற்ற சிறந்த வீரரான அவருடைய கைகளிலேதான் அல்லாஹ் வெற்றியை வழங்குவான்."

மறுநாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் ஹஸரத் அலீயினுடைய கரங்களிலே இஸ்லாத்தின் கொடியை வழங்கினார்கள். மிக ஆக்ரோஷமாக நடைபெற்ற அந்த யுத்தத்தில் யூதர்கள் படுதோல்வியடைந்ததோடு, அவர்களது மாபெரும் கோட்டையும் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப் பட்டது.

சபையில் இருந்தோர் இச்சம்பவ நிகழ்வை ஞாபகித்துக் கூறியதன் பின்னார், இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அப்துல்லாஹ் இப்னு நாபிஃயின் பக்கம் திரும்பி, " இந்த ஹதீஸைப் பற்றி என்ன கூறுகின்றீர்? எனக் கேட்டார்கள்.

"இது சஹீஹான ஹதீதாகும். ஆனால் அலீ அதற்குப் பின்னால் குப்ரில் விழுந்து அநியாயமாக காரிஜீன்களை படுகொலை செய்தார்" என அப்துல்லாஹ் கூறினார்.

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் ,அப்துல்லாஹ்வைப் பார்த்துக் கேட்டார்கள்: "அல்லாஹ் அலியை விரும்புகின்ற நேரத்தில், அவர் பின்னாளில் காரிஜீன்களை கொலை செய்வார் என்று அறிநிதிருந்தானா? அல்லது அறியாதிருந்தானா? அல்லாஹ் அறிந்திருக்கவில்லையென்று நீர் கூறினால் காபிராகி விடுவீர்"

"அல்லாஹ் அறிந்துதான் இருந்தான்" என்று அப்துல்லாஹ் கூறினார்.

"அலீ தனக்கு வழிப்படக்கூடியவர் என்பதனால் அல்லாஹ் அவரை விரும்பினானா? அல்லது அவர் பாவம் செய்யக்கூடியவர்,அநீதியிழைக்கும் குற்றவாளி என்பதனால் அவரை விரும்பினானா?" என இமாமவர்கள் வினவினார்கள்.

ஆம் அவர் தனக்கு வழிப்படக்கூடியவர் என்பதனதலேயே அல்லாஹ் அவரை விரும்பினான் என அப்துல்லாஹ் கூறினார். ( அதாவது அலீ பிற்காலத்தில் பாவம் புரிவார் என்றிருந்தால் அல்லாஹ் அதனை அறிந்திருப்பான். அலியை

விரும்பியிருக்கவுமாட்டான். இதன்படி காரிஜீன்களுடன் ஹஸரத் அலீ யுத்தம் புரிந்தது அல்லாஹ்வுக்கான வழிபடுதலே என்பது தெளிவாகின்றது)

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் "எழுந்திரும். நீர் தோல்வியுந்நு விட்டீர் உமக்கு எந்த விடையும் தெரியவில்லை" என்று அப்துல்லாஹ்வை பார்த்துக் கூறினார்கள்.

திடுக்கிட்ட அவர், உத்வேகம் பெற்றவராக பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்:

"குமரி இருட்டு நீங்கி விடியற் காலை ஆகிவிட்டதென்று உங்களுக்குத் தெளிவாகும்......" ( சூரா அல்பகரா)

அதிகாலை உதயத்தைப் போல் தனக்கு உண்மை தெளிவாகி விட்டது என்பதை சுட்டும் முகமாக இவ்வசனத்தை ஓதிய அவர், தொடர்ந்து பின்வரும் வசனத்தையும் ஓதிக் காண்பித்தார்:

"தன்னுடைய தூதுத்துவத்தை எங்கு எவருக்கு வழங்குவது என்பதை அல்லாஹ்தான் நன்கறிவான்" (சூரா அல்அன்ஆம்)

## இஸ்லாமிய திர்ஹம்களும் நாணயங்களும்

ஹிஜ்ரத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் காகித உற்பத்தியானது ரோம் தேசத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. அதன்பின் எகிப்தில் காகித உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் அனைத்திற்கும் ரோமானிய செயன்முறைகளே முன்னோடிகளாகக் கொள்ளப்பட்டு வந்தன.

எகிப்திலிருந்த கிறிஸ்தவர்கள் நாட்டின் பணத்தாள்கள் ரோமானிய வழிமுறையைப் பின்பற்றி, பிதா - மகன் - பரிசுத்த ஆவி எனும் கிறிஸ்தவ அயைடாளங்கள் அடங்கிய சொற்பிரயோகத்தை அச்சடித்துக் கொண்டிருந்தனர்.

உமையா கலீபா அப்துல் மலிக் புத்திக்கூர்மை மிக்கவராக இருந்தார். எகிப்தின் பணத்தாள்களைக் கண்ட அவர், அது பற்றிய அவதானிப்பில் இறங்கி, அவற்றிலுள்ள வார்த்தையை அரபியில் மொழிபெயர்க்குமாறு கடடளையிட்டார். மொழிபெயர்ப்பில் கிறிஸ்தவ மதச் சொற்பிரயோகமானதைக் கண்ட கலீபா, முஸ்லிம் நாடான எகிப்தில் இவ்வாறான நடவடிக்கை எப்படி சாத்தியமாகும் என்று சீற்றம் கொண்டார். எகிப்திலிருந்த தனது கவர்னருக்கு உடனடியாக அவர் அனுப்பி வைத்த கடிதத்தில், பணத்தால்கள் அனைத்திலும் ஷஹாதா கலிமை பொறிக்குமாறு கட்டளையிட்டார். இக்கட்டளை ஏனைய

இஸ்லாமிய நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன்பயனாக பணத்தாள்களிலிருந்த கிறிஸ்தவ அடையாளங்கள் அழிக்கப்பட்டு இஸ்லாமிய அடையாளங்களுடனான புதிய தாள்கள் நடைமுறைக்கு வந்தன.

இஸ்லாமிய ஏகத்துவ அடையாளங்களுடனான இப்பணத்தாள்கள் உலகின் நாலா திக்கிலும் பரந்து ரோம் தேசத்து சக்கரவர்த்தியையும் சென்றடைந்தது சக்கரவர்த்தி, கலீபா அப்துல் மாலிக்குக்கு எழுதிய கடிதத்தில் காகித உற்பத்தியானது எப்போதும் ரோமானிய அடையாளங்டகளுடனேயே இருந்து வந்துள்ளது. நீர் இதனை தடை செய்தது சரியானால், இதற்கு முன்னர் இதனை பயன்படுத்திக் கொண்டிருந்த உமக்கு முந்திய கலீபாக்கள் அனைவரும் செய்தது தவராகும். இக்கடிதத்துடன் உமக்கு பொருத்தமான அன்பளிப்புகளையும் தான் அனுப்பி வைக்கிறேன். எமது அடையாளங்களை அழிக்கின்ற நடவடிக்கைகளை விட்டும் இதற்கான உமது பதிலுறுப்பு எமது நன்றிக்கும் மதிப்புக்கும் உரியதாக இருக்கும்.

எனினும் அந்த அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளாது நிராகரித்த அப்துல் மலிக், சக்கரவர்த்தியின் தூதனிடம் "இந்தக்கடிதத்துக்கு பதிலளிக்க முடியாது என்றும் சொல்லியனுப்பினார்.

ரோம் சக்கரவர்த்தி, அப்துல் மலிக்கை திருப்திப்படுத்துவதற்காக மீண்டும் இரட்டிப்பான பொருட்களடங்கிய அன்பளிப்புகளை அனுப்பி வைத்தார். இதனுடன் ஒரு கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

"எனது அன்பளிப்புகளின் சொற்பமான அளவு உம்மை சிறுமைப்படுத்தி விடும் எனபதற்காகவே நீர் அதனை ஏற்றுக் கொள்ளாது நிராகரித்து இருக்கிறீர் என நான் நினைக்கிறேன். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட விடயத்தை நீர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்க்கிறேன்"

எனினும் இரண்டாம் முறையும் எவ்வித பதிலுமாளிக்காது, அந்த அன்பளிப்புக்களையெல்லாம் அப்துல் மலிக் திருப்பியனுப்பி விட்டார். அவ்வேளை அப்துல் மலிக்குக்கு ரோம் சக்கரவத்தி எழுதிய கடிதமாவது:

"இரண்டாம் முறையும் எனது அன்பளிப்புக்களை நீர் தட்டிக்கழித்து விட்டீர். எனது வேண்டுகோள்களை நிராகரித்து விட்டீர். இதோ மூன்றாவது தடவையாக முன்னர் அனுப்பியதிலும் பார்க்க பன்மடங்கான அன்பளிப்புக்களை நான் அனுப்பி வைக்கிறேன். இவற்றை ஏற்றுக் கொண்டு பணத்தாள்களிலுள்ள எமது அடையாளங்களை அழிக்கும் முயற்சியை கைவிட வேண்டுமெனக் கோருகின்றேன். இதனையும் நீர் நிராகரித்தால் அதற்குப் பதிலீடாக உங்களது

நபியைத் தூற்றக் கூடிய, இகழக்கூடிய சொல்லாடல்களுடன் தங்கம், வெள்ளியிலான நாணயங்களை நான் வெளியிடுவேன். நாணயக்குற்றிகளை பொறிப்பதென்பது ரோமானியர்களுடைய விசேட ஆற்றல் என்பதை நீர் அறிவீர். இந்த நாணயங்களை உமது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களும் பயன்படுத்துவார்கள். அதிலுள்ள உமது நபியின் மீதான இகழ்வு உங்களை பெரும் அவமானத்திற்குள்ளாக்கி விடும். அத்தகைய அவமானத்தைவிட என்னுடைய இந்த அன்பளிப்புகளை ஏற்றுக் கொள்வது உமக்கு சிறந்தது. அவ்வாறு ஏற்றுக் கொண்டால் எம்மிடையேயான சிரந்த நட்புணர்வை கடந்த காலங்களைப் போன்று தொடர்ந்தும் நாம் பேணிவர முடியும்"

இதற்கு விடையளிக்க முடியாமல் அப்துல் மலிக் தடுமாறிப் போனார். 'இறைத்தூதர் நிந்திக்கப்படுவதற்கு காரணமாக அமைந்து விடும் நிலை எனக்கெற்பட்டு விட்டதே. நான் மிகுந்த துரதிஷ்டசாலி, இஸ்லாத்தில் மிக கெட்டவன்' என அவர் அங்கலாய்த்தார்.

முஸ்லீம்கள் பலரை அழைத்து ஆலோசனை கேட்டார். ஆனால்,இதற்கான தீர்வாக யாரும் சிறந்த ஆலோசனை கூறவில்லை. அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர், 'இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழியைத் தெரிவிக்கக்கூடிய ஒருவர் இருக்கின்றார். ஆனால், நீங்கள் அவரை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கூறினார்.

அதைக் கேட்டு கோபமுற்ற அப்துல் மலிக் 'உனக்கு நாசமுண்டாவதாக. இப்போது அதற்கெல்லாம் நேரமில்லை. அம்மனிதர் யாரென்று கூறு' என்று கடிந்து கொண்டார். 'கலிபாவே! இந்தப் பிரட்சிணைக்கான தீர்வை இமாம் பாக்கீர் அவர்களிடமே தெரிந்து கொள்;ள வேண்டும்' என்று அவர் கூறினார்.

அதனை ஏற்றுக் கொண்ட அப்துல் மலிக், உடனடியாக மதீனாவின் கவர்ணருக்கு அனுப்பிய கடிதத்தில், 'இமாம் பாக்கிரை அன்பாகவும் மரியாதையாகவும் சிரியாவுக்கு அழைத்து வருமாறு' பணித்திருந்தார்.

ரோமிலிருந்து வந்த சக்ரவர்த்தியின் தூதன், இமாம் பாக்கிர் அவர்கள் வரும் வரை சிரியாவிலேயே தங்கியிருந்தான்.

இமாமவர்கள் அங்கு வந்ததும் அவர்களுக்கு சகல விபரங்களும் எடுத்துக் கூறப்ட்டன. இமாமவர்கள் கூறினார்கள்:

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களை இழிவுபடுத்தும் செயலை ரோம் சக்கரவர்த்தி ஒரு போதும் செய்யமாட்டார். அத்தகைய மோசமான செயலை செய்வதற்கு அனைத்து சக்தியும் கொண்ட அல்லாஹ் அனுமதிக்கமாட்டான். இந்தப் பிரச்சினைக்கான தீர்வு மிகவும் இலகுவானதாகும்.

தொழிலாளர்கள் அனைவரையும் இப்போது ஒன்றுகூட்டுங்கள். நாணயக்குற்றிகளை உருவாக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிடுங்கள். நாணயத்தின் ஒரு பக்கத்தில் சூரா தௌஹீதையும் மறுபுறுத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களது பெயரையும் அவர்கள் பொறிக்கட்டும் இவ்வாறு நாமே நாணயக் குற்றிகளை வெளியிடுவதன் மூலமாக ரோமானிய நாணயங்களின் தேவையிலிருந்து நாம் நீங்கிவிட முடியும்.

இவ்வாறு கூறிய இமாம் பாக்கிர் அவர்கள் நாணயக்குற்றிகளை உருவாக்குவது பற்றியும் ஒவ்வொரு நாணயமும் அவற்றின் பெறுமதிக்கேற்ப கொண்டிருக்க வேண்டிய நிறை, அளவு பற்றியும் விபரித்தார்கள். பத்து திர்ஹம் நாணயக் குற்றிகள் ஏழு மிஸ்கால் கனவளவு கொண்டிருக்க வேண்டுமெனவும் மற்றும் பல விபரங்களையும் எடுத்துக் கூறினார்கள். அந்த நாணயக் குற்றிகளில் அவை வெளியிடப்பட்ட இடம், காலம் என்பவற்றையும் பொறிக்கும் படியும் பணித்தார்கள்.

இமாம் பாக்கிர் அவர்கள் குறிப்பிட்ட அனைத்தையும் அமுல்படுத்துமாறு கலீபா அப்துல் மலிக் கட்டளை பிறப்பித்தார். முஸ்லிம் உலகின் அனைத்து நாடுகளிலும் புதிய நாணயக் குற்றிகளே பயன்படுத்தப்பட வேண்டுமென அவர் உத்தரவிட்டதோடு, மக்கள் தம்மிடமுள்ள பழைய நாணயங்களை அவற்றுக்குப் பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்து, அதற்குப் பதிலாக புதிய நாணயங்களை பெற்றுக் கொள்ளுமாறும் கட்டளையிட்டார்.

பின்னர் ரோம் சக்கரவர்த்தியின் தூதனிடம் தமது நடவடிக்கையெல்லாம் முழுமை பெற்று விட்டதெனக் கூறி அவனை ரோமுக்கு திருப்பியனுப்பி வைத்தார்.

விபரங்களைக் கேட்டறிந்த போது, சக்கரவர்த்தியின் சபையிலிருந்த அமைச்சர்கள் வெகுண்டெழுந்து உடனடியாக நபியை இகழும் இகழும் நாணயக்குற்றிகளை வெளியிட வேண்டுமென கர்ஜித்தனர். ஆனால் சக்கரவர்த்தி அமைதியாக பதிலளித்தார்:

"நபியைத் தூசிப்பதன் மூலமாக, அதைப்பார்க்கும் அப்துல் மலிக்கை கோப மூட்ட வேண்டுமென்றுதான் நான் விரும்பினேன். ஆனால் இப்போது இதனை அமுல் படுத்துவதென்பது வீணான வெற்று வேலையாகவே இருக்கும். ஏனெனில், முஸ்லீம் நாடுகள் ரேமானிய நாணங்களின் தேவையிலிருந்து நிங்கிவிட்டன"20

## இமாம் பாக்கிர் அவர்களது தோழர்கள்

இமாம் பாக்கிர் அவர்களது அறிவுச் சோலையில் கல்வி பெற்று, அறிவிலும் ஒழுக்கத்திலும் மேன்மையிலும் சிறப்புற்று விளங்கியோர் பலர்.அவர்களில் சிலரை இங்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அபான் இப்னு தஹ்லப்: இவர்கள், இமாம்களான ஸைனுல் ஆபிதீன், முஹம்மத் பாக்கீர், ஜஃபர் ஸாதீக் ஆகிய மூவருடைய மஜ்லிஸிலும் கலந்துகொண்டு அறிவை பெற்றிருக்கின்றார். தனது சமகால அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கிய அபான் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹு, கிராஅத், மற்றும் மொழித்துறை ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

அவரது அறிவுத்தரம் மிக உயர்ந்து விளங்கிய போது அதனால்தான், இமாம் பாக்கீர் அவர்கள், அபானிடம் மதீனா பள்ளிவாயலில் அமர்ந்து மக்களுக்கு மார்க்கத்தீர்ப்பு வழங்குமாறு கட்டளையிட்டிருந்தார்கள்.

மேலும் "உம்மைப் போன்றவர்களை எமது நேசர்கள் மத்தியில் காண்பதை நான் மிகவும் விரும்புகிறேன்" என்று அபானைப் பார்த்துக் கூறியிருக்கிருக்கி ன்றார்கள்.

அபான், மதீனா பள்ளிவாயலுக்குல் நுழையும் போதெல்லாம் மக்கள் அவரைச் சுற்றி அமர்ந்து அவரிடமிருந்து அறிவு நார் விளக்கங்களையும் தெளிவுரைகளையும் பெற்றுக் கொள்வார்.

அவரடைய மரண செய்தி அறிந்த போது இமாம் ஜஃபர் ஜாதிக் அவர்கள் இவாவாறு குறிப்பிட்டார்கள்: "அல்லாஹ்மீது ஆணையாக அபானின் மரணமும் எனது உள்ளத்தை மிகவும் வருத்துகின்றது"21

ஸுராரா: இமாம் பாக்கீர், இமாம் ஸாதீக் ஆகியோரினால் உருவாக்கப்பட்டவர்களுள் மிக முக்கிமானவர்களாக ஆறு பேரை அஹ்லுல் பைத் அறிஞர்கள் தெரிவு செய்துள்ளனர். அவர்களுள் ஒருவராக ஸுராரா விளங்குகின்றார்.

இமாம் ஸாதிக் அவர்கள் குறிப்பிடுவார்கள்: பரீத் இப்னு முஆவியா, அபூபஸீர், முஹம்மத் பின் முஸ்லீம், மற்றும் ஸுராரா ஆகியோர் இல்லையென்றிருந்தால் நுபுவ்வத்தின் அடையாளங்கள், பரம்பலில் இத்தகைய பிரமாணத்தைப் பெற்றிருக்காது இவர்கள் அல்லாஹ்வுடைய நம்பிக்கையாளர்களாக இருக்கின்றார்கள்.

மேலும் இமாம் ஸாதிக் அவர்கள் குறிப்பிட்டார்கள்: "உயிரோடுள்ளவர்களிலும், மரணித்தவர்களிலும் பரீத், ஸுராரா, முஹம்மத்

பின் முஸ்லிம், அல்அஹ்வல் ஆகியோர் எனக்கு மிக விரும்பமானவர்களாக இருக்கின்றார்கள்"

ஸுராரா, இமாம்களை மிகவும் நேசித்ததோடு அவர்களுக்கு பணிவிடை செய்வதில் மிக்க ஈடுபாடுடையவராகவும் இருந்து வந்தார். எவ்வித அச்சமுமின்றி வெளிப்டையாகவே இவற்றை மேற்கொண்டு வந்தார். இதனால் இமாம் ஸாதிக் அவர்கள், அவரைப் பாதுகாக்கும் நோக்குடன் வெளிப்படையான இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்ந்து கொள்ளுமாறும், அஹ்லுல் பைத் நேசர்களை அழிப்பதில் ஈடுபட்டுள்ள அக்கிரமக்காரர்களின் பார்வையில் அகப்பட்டு விடாதிருக்குமாறும் அறிவுரை பகர்ந்துள்ளார்கள்.

கிராஅத், பிக்ஹு, தத்துவவியல், கவிதை, அரபு இலக்கியம் முதலான விடையங்களில் சிறந்த புலமைபெற்றவராக ஸுராரா திகழ்ந்தார். அவருடைய வரலாற்றுச்சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.22

அல் குமைத் அல் அஸதீ:

இவர் ஆளுமை மிக்க கவிஞராக விளங்கியவர். தனது வல்லமை மிக்க நாவையும் இனிய கவிதை புனையும் ஆற்றலையும் அஹ்லுல்பைத்தினரை பாதுகாக்கும் விடையத்திற்கென பயன்படுத்தினார். அவரது கவிதைகள், அஹ்லுல் பைத்தினரை எதிர்க்கும் பகைவர்களின் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்தக் கூடியதாகவும் அவர்களை இகழ்ந்துரைப்போரை வசைபாடுவதாகவும் இருந்தன. இதனால் பல சமையங்களில் அவரை கொலை செய்வதற்கான முயற்சிகள் உமையா கலிபாக்களின் புறத்திலிருந்து பல் வேறு கோணங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அஹ்லுல் பைத்தினரை பாதுகாப்பது மட்டுமன்றி, அவர்களுடன் தொடர்புடைய அனைத்து நிகழ்வுகளும் உள-உடல் தைரியமும் வீரமுமிக்கவர்களால் மாத்திரமே செயற்படுத்த முடியுமானளவுக்கு மிகவும் அச்சுறுத்தல் நிறைந்தவையாக அமைந்திருந்தன.

உமையாக்களுடைய ஆட்சிக் காலப்பகுதியில் மரணத்தை வெற்றி கொண்டவர்களில் அல் குமைத்தும் ஒருவராக இருந்தார்.

அவர் தனது சக்கியின் உச்சகட்டம் வரை உண்மையை உயர்த்துவதற்குப் பாடுபட்டதோடு, உமையாக்களுடைய உண்மை செரூபங்களை மக்கள் மத்தியில் வெளிக் கொணரும் விடையத்திலும் முழுமூச்சாக ஈடுபட்டார். உமையாக்கள் பற்றிய தனது கவிதையொன்றில் அவர் பின்வருமாறு பாடுகின்றார்;:

"அப்துல்மலிக், வலீத், சுலைமான்,

பிறகு ஹிஷாம் எல்லோரும் தமது

ஆட்சியின் போது

கால் நடைகளை வளர்ப்பதற்கும்

மனிதர்களை ஆளுவதற்கும் இடையிலே

சமத்துவத்தை பேணினார்கள்"

அல்குமைத், இமாம் பாக்கீர் அவர்களை நேசிப்பதில் ஆழ்ந்தவராக இருந்தார். அந்த நேசிப்பில் தன்னையே மறந்த விடும் அளவு அவரது பற்று வியாபித்துருந்தது. ஒரு நாள் அவர், இமாமவர்களின் புகழ் பாடும் சில கவிதைகளை அவர்களுக்கு முன்னால் படித்து கான்பித்தார்.

அதைக் கேட்ட இமாமவர்கள், கஃபாவின் பக்கம் திரும்பி, "யா அல்லாஹ்

அல் குமைத் மீது அருள் புரிவாயாக!" என்று பிரார்த்தித்து விட்டு, பின் குமைத்தின் பக்கம் திரும்பி " உமக்காக எனது குடும்பத்தினரிடமிருந்து ஆயிரம் திர்ஹம்களை நான் சேகரித்து வைத்துள்ளேன்" என்று கூறினார்கள்.

அல்குமைத் கூறினார்:"அல்லாஹ் மீது ஆணையாக நான் தங்கத்தையோ வெள்ளியையோ விரும்ப வில்லை. நான் தங்களிடம் விரும்புவதெல்லாம் தங்களது ஆடைகளில் ஒன்றை எனக்குத் தர வேண்டும் என்பதைத்தான்"

இமாமவர்கள் தமது ஆடைகளில் ஒன்றை அவருக்குக் கொடுத்தார்கள்.23

மற்றொரு நாள், இமாம் பாக்கிர் அவர்களுடன் அல்குமைத் அமர்ந்திருதார் அப்போது இமாமவர்கள் ஒரு கவிதை படித்தார்கள். அதன் பொருள்

" முன்னோடிகளாக வாழ்ந்தவர்களெல்லோரும்

சென்று விட்டார்கள்.

பொறாமையும் வஞ்சகமும் கொண்டோர் எங்கும்

நிறைந்து விட்டார்கள்"

உடனே இமாமவர்கள் பாடிய அதே ஓசை, கவிதை அபைப்புடன் அல்குமைத் பின்வரும் கருத்துடைய பதில் கவிதையைப் பாடினார்கள்:

"ஆயினும் பூமியின் மேலே நல்லவர்

ஒருவர் எஞ்சியுள்ளார்

தங்களே அவர்--மக்களின்

விருப்பம் பெற்றவர்"24

முஹம்மத் பின் முஸ்லிம்: இவர் சிறந்த மார்க்க சட்ட வல்லுனராகவும் இமாம்களான முஹம்மத் பாக்கிர், ஜஃபர் ஸாதிக் அலைஹிமா ஸலாம் ஆகியோரின் தோழர்களில் ஒருவராகவும் விளங்கினார். ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று, இமாம் ஸஃபர் ஸாதிக் அவர்கள், நுபுவத்தின் அடையாளங்களை நிலைப்படுத்திய நால்வரில் ஒருவராக இவரைக் குறிப்பிட்டார்கள்.

முஹம்மத், கூபா வாசியாவார். இமாம் பாக்கிர் அவர்களிடமிருந்து அறிவைக் கற்றுக் கொள்வதற்காக அவர் மதீனாவுக்கு வந்தார். இந்நோக்கத்திற்காக மதீனாவில் நான்கு வருடங்கள் தங்கியிருந்தார்.

அப்துல்லாஹ் பின் யஃபூர் கூறுகின்றார்: நான் ஒருமுறை இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களிடம் சென்று," சில சமயங்களில் என்னுள் எழும் சில கேள்விகளுக்கு எனக்கு விடை தெரிய வில்லை. தங்களை அடிக்கடி சந்தித்துக் கொள்ளவும் என்னால் முடிவதில்லை. இந்நிலையில் நான் என்ன செய்வது?" என்று வினவினேன். இமாமவர்கள், முஹம்மத் பின் முஸ்லிமைக் குறிப்பிட்டு " அவரிடம் நீர் ஏன் பதில் தேடக் கூடாது?" எனக் குறிப்பிட்டார்கள்.25

கூபாவைச் சேர்ந்த ஒரு பெண், இரவு நேரமொன்றில் முஹம்மத் பின் முஸ்லிமுடைய வீட்டுக்கு வந்தாள். அவரிடம் சொன்னாள்: " எனது மகனுடைய மனைவி மரணித்து விட்டாள். அவளது வயிற்றில் சிசு உயிரோடு இருக்கின்றது. இச்சமயத்தில் எப்படி நான் நடந்து கொள்வது?"

முஹம்மத் பின் முஸ்லிம் கூறினார்: " இமாம் பாக்கிர் அவர்கள் ஏவியதின் படி, தாயின் வயிற்றைப் பிளந்து சிசுவை வெளியே எடுங்கள். பிறகு மையித்தை அடக்கம் செய்யுங்கள்" பின்பு முஹம்மத் பின் முஸ்லிம் அப்பெண்ணைப் பார்த்து, "என்னைப் பற்றி உனக்கு யார் அறிவித்தது?" எனக் கேட்ட போது " நான் அபூஹனீபா அவர்களிடம் இதற்கான மார்க்க விளக்கம் பற்றி வினவினேன். விடையளிக்க முடியாது தடுமாறிய அவர், 'முஹம்மத் பின் முஸ்லிமிடம் சென்று இதற்கான விளக்கத்தைக் கேள். அவர் சொல்லும் விளக்கத்தை எனக்கும் அறிவித்துக் கொடு' என்று கூறினார்" என அப்பெண் கூறினாள். இந்நிகழ்வுக்குப் பின் ஒரு நாள் முஹம்மத் பின் முஸ்லிம், கூபா பள்ளிவாயலில்

அபூஹனீபாவை சந்தித்தார். அபூஹனீபா மேற்குறிப்பிட்ட விடயம் (மஸ்அலா)பற்றி தனது தோழர்களிடையே உரையாடிக் கொண்டிருந்தார். அதற்கான மார்க்க விளக்கத்தை தானே அப்பெண்ணுக்கு சொல்லிக் கொடுத்தது போன்று அவர் பேசிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த முஹம்மத் பின் முஸ்லிம், அபூஹனிபாவுக்கு விளங்கும் படியாக சத்தமிட்டுக் கனைத்துக் காட்டினார். அவரது கனைப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அபூஹனிபா, புன்சிரிப்புடன் அவரைப் பார்த்து கூறினார்: " அல்லாஹ் உங்களது பாவங்களை மன்னிப்பானாக. எங்களையும் வாழ விடமாட்டீர்களா?" 26

## இமாம் பாக்கிர் அவர்களது ஷஹாதத்

இமாம் பாக்கிர் அவர்களுக்கு அவர்களது எதிரிகளால் நஞ்சூட்டப்பட்டது. அவர்கள் ஹிஜ்ரி 114 துல்ஹஜ் ஏழாம் நாள் வபாத்தானார்கள். அப்போது அவர்களது வயது ஐம்பத்து ஏழாகும். இது உமைய்க்களின் கொடுங்கோலாட்சியாளர் ஹிஷாம் இப்னு அப்தில் மலிக்கின் காலத்தில் இடம் பெற்றது. வபாத்தான இரவு இமாம் பாக்கிர் அவர்கள், தமது புதல்வர் ஜஃபர் ஸாதிக் அவர்களுக்குச் சொன்னார்கள்:

"இந்த இரவு உலகை விட்டுச் சென்று விடுவேன். எனது தந்தை மதுரமான ஒரு பானத்தை எனக்குக் கொண்டு வருவதாகவும் நான் அதைப் பருகுவதாகவும் கனவு கண்டேன். நிரந்தரமான உலகையும் இறை சந்திப்பையும் பற்றி அவர் எனக்கு நன்மாராயம் கூறினார்"

மறு நாள், இமாம் பாக்கிர் அவர்களது தூய உடல், ஜன்னதுல் பகீஃயில் இமாம் ஹஸன், இமாம் ஸஜ்ஜாத் ஆகியோருடைய கப்றுக்கு அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் மீது அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக.27

## இமாம் பாக்கிர் அவர்களது பொன் மொழிகள்

நூலின் இறுதிப் பகுதியில் இமாம் பாக்கிர் அலைஹிஸ் ஸலாம் அவர்களது பொன்மொழிகளில் சில வற்றை இங்கு பகிர்ந்து கொள்வோம். அறிவின் பொக்கிஷமாக விளங்கிய அவர்களது கூற்றுக்கள் ஒவ்வொன்றும் முஸ்லிம்களது வாழ்க்கையில் வழிகாட்டும் பிரகாசமான ஒளிவிளக்குகளாகும்.

1) பொய் என்பது ஈமானின் ஆபத்தாகும்.28

2) உண்மையான இறைவிசுவாசி பிறரை அச்சுறுத்துபவனாகவோ, பேராசை கொண்டவனாகவோ, கஞ்சத்தனமுடையவனாகவோ இருக்க மாட்டான்.29

3)மு:மின்களை தூஷிப்பதை கண்டிப்பாக தவிர்ந்து கொள்ளுங்கள்.30

4)உனது சகோதர முஸ்லிமை நேசிப்பாயாக.உனக்கு விருப்பமானவற்றை அவனுக்கும் விரும்புவாயாக. உனக்கு வெறுப்பானவற்றை அவனுக்கும் வெறுப்பாயாக. 27-1

5) ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுடைய வீட்டுக்கு அவனை சந்திப்பதற்காக, அல்லது அவனிடம் ஒரு தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக சென்றிருக்கும் போது, வீட்டிலுள்ள முஸ்லிம், வந்தவரை உள்ளே நுழைய அனுமதிக்காமலும், வீட்டில் இருந்து வெளியே வந்து அவரை சந்திக்காமலும் அவரைத் திருப்பியனுப்புவாரானால் அவர் அல்லாஹ்வின் சாபத்திற்கு மிகப் பொருத்தமான ஒருவராக ஆகிவிடுகிரார்.27-2

6) நிச்சயமாக அல்லாஹ் பொறுமையும், வெட்க உணர்வும் உள்ள மனிதனை மிகவும் நேசிக்கின்றான்.27-3

7)எவர் மனிதர்களை விட்டும் தனது கோபத்தைத் தடுத்துக் கொள்கின்றாரோ, மறுமை நாளில் அல்லாஹ் அவரை விட்டும் கியாமத்தின் வேதனையைத் தடுத்து விடுவான்.27-4

8) நன்மையை ஏவி,தீமையை தடுக்கும் விடயத்தை தேவையற்ற விடயமாகக் கருதும் கூட்டம் மிகக் கெட்ட கூட்டமாகும்.27-5

9)தனது வீட்டுக்கள் எதிரி நுழைந்து விட்ட போதும் கூட தற்காப்புக்காக எழுச்சி பெறாது சோர்ந்து கிடக்கும் மனிதன் அல்லாஹ்வின் விரோதியாவான்.27-6

---

1 மிஸ்வாஹுல் முதஹஜ்ஜித் - ஷெய்க் து{ஸி பக் 557

2 இமாம் ஸாதிக்( உம்மு அப்தில்லாஹ்) மு:மினான , இறையச்சமுள்ள நல்ல பெண்மனியாவார் (தவாரிகுந் நபி வஆல்) பக் 47

3 ஆமாலி – ஷெய்க் ஸதூக் பக் 211

4 இலலுஷ் ஷராயி: பாக 1 பக் 222

5 அல் இர்ஷாத் - ஷெய்த் முபீத் பக் 246

6 அல் இர்ஷாத் பக் 246

7 அல் மனாகிப் லிப்னி ஷஹ்ரிஆஷுப் பாக 3 பக் 329

8 பிஹாருல் அன்வார் பாக 46 பக் 243

9 மேல் குறிப்பிட்டவை

10 பிஹாருல் அன்வார் பாக 46 பக் 247

11 ஆமாலி – ஷெய்க் தூஸி பக் 261

12 அல் இர்ஷாத் பக் 247

13 அல் மாயிதா வசனம் 3

14 சூரா கியாமா வசனம் 16

15 சூரா அல் ஹாக்கா வசனம் 12

16 சூரா அந்நஹ்ல்

17 சூரா யாசீன்

18 சூரா அன்ஆம்

19 தலாயிலுல் இமாமா பக் 104--106

20 அல் மஹாஸினு வல்முஸாவியு - பைஹகீ பாக 2 பக் 232 - 236

21 ஜாமியுர்ருவாத் பாக 1 பக் 9

22 ஜாமியுர்ருவாத் பாக 1 பக் 117, 324 - 325

23 சபீனதுல் பிஹார் பாக 2 பக் 496

24 முன்தஹல் ஆமால் பாக 2 பக் 7

25 துஹ்பதுல் அஹ்பாப் பக் 351 ஜாமியுர்ருவாத் பாக 2 பக் 164

26 ரிஜாலுல் கஷ்ஷீ 162

27 பஸாயிருத் தரஜாத் பக் 141

28 வஸாயிலுஷ்ஷீஆ

29 வஸாயிலுஷ்ஷீஆ

30 வஸாயில்